மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
இடைக்கப் பெற்றது.
16
உரிய நடவடிக்கைக்காக

பொது சன
16 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 10 - 1 - 1997 இதழ்: 2

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதீனக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

# இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள்

சாவகச்சேரி, மாவட்ட வைத்தியசாலை பிள்ளைகள் விடுதியில் நத்தார் ஒளிவிழா கடந்த மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 10 - 00 மணியளவில் Dr. வி. ஆர். டேவிற் (பல் வைத்திய நிபுணரும், பதில் மாவட்ட வைத்திய அதிகாரியும்) அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக சாவகச்சேரி திருச்சபையின் குருவும் பேராயர் பிரதிஸ்தருமான வண. P. R. நவீந்திரனுகூலன் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இயேசுபிரான் ஏழைக் கோலம் பூண்டு, ஏழைக் குடும்பத்தில் எளிய சூழலில் தோன்றினார். நாம் இன்று எதிர்பார்க்கும் அன்பு, நீதி, சமாதானம் நம் உள்ளங்களில் வருகை தரவேண்டுமாயின் அவருடைய அரசு நம்மை முழுமையாக ஆட்கொள்ள வேண்டும். இதற்காக ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து வருவார் என்ற நம்பிக்கையோடும் எதிர்பார்த்தலோடும் காத்திருப்போம். சிறு பிள்ளைகள் என்னிடம் வர இடங்கொடுங்கள், அவர்களைத் தடை செய்யாதிருங்கள், கடவுளின் அரசு அப்படிப்பட்டவர்களுடையது, சிறு பிள்ளைகளே நாளைய தலைவர்களாக உருவாக வேண்டியவர்கள். ஆகவே சமுதாயத்துக்கு உகந்தவர்களாக அவர்களை வளர்த்து எடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு நம்மிடத்தில் காத்துக்கிடக்கிறது.

இவ்விழாவிற்கு திருமதி லில்லி றோகினி நவீந்தரனுகூலனும் சாவகச்சேரி கததோலிக்கக்குரு, வண. பிதா J. பற்றிக் ஞானப்பிரகாசமும் சாவகச்சேரி சபைச் செயலாளர் திரு. S. S. சற்குணசிங்கமும் வருகை தந்திருந்தனர். இறுதியில் பேராயர் பிரதிஷ்டரின் தேவ ஆசீர்வாதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

## கடந்து வந்த பாதையில்

9-1-97 ஆம் திகதி சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் 24 ஆவது நினைவு தினம்.

இத்தீவின் சுதந்திரத்துக்காக அனைத்து நிறுவனங்களும் ஏகோபித்து ஒரே தொனியில் குரல் கொடுப்பதற்காக, அனைத்து நிறுவனங்களை இணைத்து இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பை நிறுவ முற்பட்ட சிங்களத் தலைமைகள் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பினை உருவாக்கும் அதன் அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானத்தில்தானே ஆள்புல பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியிருந்தமையை ஆட்சேபித்து, அதில் இணைய மறுப்புத் தெரிவித்திருந்தனர். யாழ்ப்பாண மகாசபையின் தலைவர்களாகிய சபாபதியும், சேர் கனகசபையும், ஜேம்ஸ் பீரிஸ்சும், சமரவிக்கிரமாவும் எழுத்தில் தமக்கு அளித்த உத்தரவாதத்தை நம்பி ஏமாந்த சேர் பொன். அருணாசலம் அளித்த தூண்டுதலின் நிமித்தமே யாழ்ப்பாண மகாசபை இலங்கைத் தேசிய காங்கிரசில் இணைந்துகொண்டது ஆயினும், கொழும்புத் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கோரப்பட்டபோதே "காயுமற்ற, கறியுமற்ற சாம்பார் நிலைக்கு என் இனம் தள்ளப்படுவதே தேசியம் எனில் அத் தேசியத்தை யான்வேண்டேன்" என்று சொல்லி இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறியிருந்த சேர் பொன் அருணாசலம் அன்னியர் வரவுக்கு முன் இருந்த தமிழ் ஈழத்தை மீள்விக்கப் போவதாகச் சூளுரைத்து, தமிழர் லீக் என்னும் பெயரில் ஒரு ஸ்தாபனத்தை தொடங்கியிருந்தார். தமது குறிக்கோளை எய்து முன்பாகவே அவர் இயற்கை எய்தினார் இத் தீவின இன மோதல் தொடர்வதற்கு காரணம் அன்னார் முன்வைத்த குறிக்கோள் இன்னமும் எட்டப்படாது இருத்தலே. (சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாறு காண்க)

சா. ஆ. தருமரத்தினம்

## கிறிஸ்மஸ் மரம் நிகழ்வு

அளவெட்டி திருச்சபையின் சுற்றாடலில் அமைந்துள்ள சிற்றாலயங்களின் கிறிஸ்மஸ் மரம் நிகழ்வுகள் ஆதீனத்தின் சுவிசேஷ குழுவின் அனுசரனையுடன் 23-12-1996 அன்று மாலை 3-00 மணிக்கு நாக்கணாவத்தை சிற்றாலயத்தில் சபை ஊழியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிகளின் இறுதியில் "திசைமாறிய பறவைகள்" என்னும் நாடகம் அரங்கேறியது. இறுதியாக நாக்கணாவத்தை ஒய்வு நாட்பாடசாலைப் பிள்ளைகள் 73 பேருக்கும் கலைநகர் ஒய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகள் 89 பேருக்கும் "கிறிஸ்மஸ் தாத்தா" பரிசில்களை வழங்கினார். ஆசீர்வாதத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

## இன்னிசை ஆராதனை

அளவெட்டி, சண்டிலிப்பாய் திருஅவைகள் இணைந்து நடாத்திய இறைமகன் வருகை இன்னிசை ஆராதனை அளவெட்டித் தேவாலயத்தில் 23 12.1996 திங்கற்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. பாடகர்பவணியுடன் ஆரம்பித்த இவ் இன்னிசை ஆராதனையில் போர்க்கால சூழ்நிலையில் மக்களின் அவலநிலையில் பாலன் பிறப்பை உணர்த்தும் பாடல்கள் பாடகரினால் பாடப்பட்டது. இறைசெய்தியை இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர் அருட்சகோதரன் ஈனோக் புனிதராஜா பகிர்ந்து கொண்டார். பாடகர் குழுவிலே 35 வாலிபர்கள் பங்குகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## நத்தார் ஒளி விழா

மேற்படி விழா டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி. ப. 3.00 மணியளவில் சாவகச்சேரி சபை மண்டபத்தில் சபைக் குரு வண P. R. நவீந்திர அனுகூலனின் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது.

இவ்விழாவிற்கு சபையோரும் அயலவர்களும் சமூகமளித்திருந்தனர். நடனம், நாடகங்கள், சிந்தனைத்துளிகள், இன்னிசை கீதங்கள் கதம்ப நிகழ்ச்சிகள் பல ஆங்கிலத்திலும், தமிழிலும் இடம்பெற்றன. சபையோருக்கான வேத அறிவுப் போட்டியும் இடம்பெற்றது. பின்பு நத்தார்த் தாத்தா பிள்ளைகளுக்கு பரிசில்களை வழங்கினார். இவ் விழா சபைப்போதகரின் தேவ ஆசீர்வாதத்துடன் இனிது நிறைவேறியது.

## உசனில் ஒளி விழா

டிசெம்பர் மாதம் 14-12-1996 சனிக்கிழமை காலை 9-00மணிக்கு மேற்படி ஒளி விழா நுணாவில் திருச்சபை ஊழியன் அருட்திரு J. தேவ அருட்செல்வன் அவர்களின் ஒளியேற்றும் வைபவத்துடனும் ஜெபத்துடனும் ஆரம்பமாகியது. இதன பிரதம விருந்தினராக அண்மையில் குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடிய மிரிசுவில் St Nicholas தேவாலய பங்குத் தந்தை அருட்திரு. பீற்றர் துரைரத்தினம் அடிகளார் பங்கேற்றார். பிள்ளைகளுக்கான பரிசில்களை அருட்சகோதரி பற்றிமா அவர்கள் வழங்கினார். நன்றியுரையை பெற்றோரின் சார்பில் திரு. குகதாசன் சிவதாஸ் அவர்கள் கூறினார். வரணி திருச்சபை ஊழியன் அருட்திரு S. I. ஆனந்தராஜனின் ஜெபததுடனும் ஆசீர்வாதததுடனும் ஒளிவிழா இனிதே நிறைவேறியது. நிரம்பி வழிந்த விழா மண்டப மக்களிற்கு தேனீர் விருந்து உபசாரம் வழங்கப்பட்டு இப்பெருவிழாவை உசன் கிராம மக்கள் சந்தோசமாக கழித்தார்கள்.

பொதுசன நூலகம்

# உடுவில் திருச்சபையின் 175 ஆம் ஆண்டு நிறைவு விழா

அமெரிக்க மிஷனறிமாரால் 1820 ஆம் ஆண்டு கட்டியெழுப்பப்பட்ட உடுவிற் திருச்சபையின் 175 ஆம் ஆண்டுவிழா 27-12-96 ஆம் திகதி முதல் 28 ஆம் 29 ஆம் திகதிவரை மூன்று நாட்கள் திருச்சபை மக்களாற் கொண்டாடப்பட்டது. சென்ற ஆண்டு நினைவு கூர வேண்டிய இந்நாட்கள் நாட்டின் போர்ச் சூழல்களால் இவ் வருடமே கொண்டாட முடிந்தது. இவ் வாண்டும் போர் மேகங்கள் நம்மைச் சூழவிருந்தும் கர்த்தரின் கிருபையால் இந்நிறைவு விழா மிகவும் சிறப்பாகவும் குதூகலமாகவும் கொண்டாடக் கர்த்தர் கிருபை கிடைத்தது.

27-12-96 அன்று காலை 8 . 30 மணிக்கு எழுப்புதற் கூட்டத்துடன் இவ்விழா ஆரம்பமானது. வண்ணார் பண்ணை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு S. ரெறன்ஸ் அவர்கள் இவ் வாராதனையை வழிநடத்தியதுடன் தனது செய்தியையும் கொடுத்தார். அவர் தனது அருளுரைக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்ட வேதபாகம் II கொரிந்திய 5:11-17 வசனங்களாகும். அருளுரையில் அவர் குறிப்பிட்ட முக்கிய சிந்தனை நமது 175ஆம் ஆண்டு திருச்சபை ஓட்டத்தில் நமது வளர்ச்சி என்ன? ஆண்டவருடன் நாம் கொண்ட உறவு எப்படிப்பட்டது? உடல் வளர்ச்சியுடன் ஆன்ம வளர்ச்சியில் நமது பங்கு என்ன? என்பவை திருச்சபையாரின் முன் வைக்கப்பட்ட கருத்தோட்டங்களாகும்.



ஆராதனையைத் தொடர்ந்து தேநீர் விருந்தில் யாவரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து சகோதரன் ஈனோக் புனிதராஜா வேதப்படிப்பு (Bible Study) நடாத்தினார். 11 30 மணிக்குக் காலை நிகழ்வுகள் முடிவுற்றன. மாலை 3 . 30 மணிக்கு மாலை நிகழ்வுகளாக

★ இயேசுதாசன் அடிகளார் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் அவசியம் என்றும் அதற்கு வேதவாசிப்பு, வேதமனனம் என்பவை அத்திவாரங்கள் என்றும் மிக அழகாகக் கதைகள் கூறி மகிழ்வித்தார்.

ஒய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளின் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இந் நிகழ்வின் பிரதம விருந்தினர் மானிப்பாய் திருச்சபை ஊழியன் அருட்திரு ஏ. யேசுதாசன் அவர்களாவார்.

★ இந் நிகழ்ச்சிக்குத் திருமதி கிருபா பவசிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். ஞாயிறுப் பாடசாலைப் பிள்ளைகள் இனிய பாடல்களைப் பாடினர். சிந்தனை மிக்க கவிதைகள் படித்தனர். நடனம், நாடகம் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். மாலை 6 மணிக்கு அன்றைய விழா இனிது நிறைவேறியது.

28-12-96 மறுநாட் காலை 8 . 30 மணிக்கு அருட்திரு S. ரெறனஸ் அடிகளாரால் எழுப்புதல் கூட்டம் நடைபெற்றது. அன்றைய அருளுரையை மத்தேயு 4:15:27 வசனங்களை ஆதாரமாகக் கொண்டு நடத்தினார். ''என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் ஆக்குவேன்'' என்ற வசனத்தைப் பின்னணியாகக் கொண்டு, நமது திருச்சபை 175 ஆண்டுகள் இயேசுவின் பின்னே சென்று அவர் காரியங்களை செய்தார்கள். எத்தனை ஆத்துமாக்கள் நம்மால் ஆதாயப் படுத்தப்பட்டார்கள். எமக்குக் கொடுத்த கனிகளால் இயேசுவை மகிமைப் படுத்தினோமா? என்ற வினாக்கள் திருச்சபையார் உள்ளங்களில் விதைக்கப்பட்டன. ஆராதனையைத் தொடர்ந்து தேநீர் விருந்து இடம்பெற்றது. அதன் பின் சகோதரன் ஈனோக் புனிதராஜாவால் வேதபடிப்பு நடாத்தப்பட்டது.

அன்று மாலை 3.30 மணிக்கு வாலிபரால் விழா சிறப்பிக்கப்பட்டது. அவ் விழாவில் ஆதீன திட்டப் பொறுப்பாளர் திரு. வி. மித்திரரஞ்சன் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார். அவரது சொற் பொழிவில் தனது வாலிப கால அனுபவங்கள் இடம் பெற்றன. ஆண்டவரின் சித்தமே வாலிபருக்குக் கிடைக்கும். அதனால் மனஞ் சோராது தேவபணிகளில் ஈடுபட வேண்டுமெனத் தன் உரையிற் குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு நமது சபைக் குருவானவர் அருட்திரு. V. ராஜ்குமார் தலைமை வகித்தார். இவ்விழாவில் சத்தியபுரத் திருச்சபை வாலிபர்கள் 'அகங்காரத்தின் அறுவடை' என்ற நாடகத்தை மேடையேற்றினர். அடுத்துச் சண்டிலிப்பாய் திருச்சபை வாலிபர்கள் 'நல்ல சமாரியன்' என்ற கதையைத் நாட்டுக் கூத்தாக நடித்து மகிழ்வித்தனர். இறுதியில் உடுவில் திருச்சபை வாலிபர் 'மனமாற்றம்' என்ற நாடகத்தினை நடாத்தி விழாவினைச் சிறப்பித்தனர்.

29-12-96 இறுதிநாள் விழா காலை நன்றி செலுத்தும் ஆராதனையுடன் ஆரம்பித்தது. சபையார் பவனி வந்து பாடித் தேவனை மகிமைப்படுத்தினர். 175 மெழுகு வர்த்திகள் ஒளி பிரகாசித்தன. இவ்வாராதனையில் நம் முன்னாள் பேராயர் கலாநிதி அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் அருளுரை வழங்கினார். நமது திருச்சபைக்கு அமெரிக்க மிஷரிமார் செய்த சேவைகளை நன்றியுடன் எடுத்துரைத்தார் தனது அருளுரையில் எபிரேயர் 12:27,28ம் வசனங்களை ஆதாரமாகக்கொண்டு ''கடவுள் இராஜ்சியத்தினை அழிக்க முடியாது'' உலகில் வாழும் போது அசைவில்லாத ராஜ்சியத்தைப் பெறுவதற்கு நாம் பயத்தோடும் பக்தியோடும் ஆராதிப்போம் என்றுரைத்தார். திருவிருந்து ஆராதனை முடிவடைந்ததும் காலையுணவு யாவருக்கும் பரிமாறப்பட்டது. தொடர்ந்து 11 30 மணிக்கு 'பட்டி மன்றம்' ஒன்று இடம்பெற்றது தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமிழர் கலாசாரங்களைப் பின்பற்றுதல் அவசியமா? அவசியமற்றதா? என்ற விடயம் இதில் வாதிக்கப்பட்டது. அவசியம் என்ற தரப்பில் திரு. குகனேசன் தலைமையில் செல்வி டெய்சி திரு. உபிரோவியம் அவர்களும் அவசியமற்றது என்ற தரப்பில் திரு. தேவானந்தன் தலைமையில் செல்வி கோஷலி பவசிங்கமும், திரு. சுதர்சன் அவர்களும் பங்களித்தனர். இதற்கு நடுவராக திருமதி கிருபா பவசிங்கம் நியமிக்கப்பட்டார். காரசாரமான விவாதங்களின் பின் சபையோர் குறிப்பும் இடம்பெற்றது நடுவர் தனது இறுதித் தீர்பின் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமிழர்கள் அவர்களுக்கென்று தனித்துவமான மரபுகள் உள. ஆயினும் தமிழர் கடைப்பிடிக்கும் சகல கலாசாரங்களையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக சாத்திரம் பார்த்தல், சாதகம் பார்த்தல், காண்டம் கேட்டல் இவை போன்றன அவசியமற்றவை என்றும் மங்களகரமான, சமுதாயத்திற்குப் பொருத்தமான சில கலாசாரங்களான நிறைகுடம் வைத்தல், சந்தணம் பரிமாற்றல், பந்தி வைத்தல் என்பன அவசியம் என்று குறிப்பிட்டார். ஆயினும் அவசியமற்றது என்று தமது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துப் பேசிய குழுவினரின் வெட்டிப் பேச்சாற்றலைப் புகழ்ந்து அக் குழுவினருக்கே வெற்றி வாகை சூட்டினார்.

இறுதியாக, 175ஆம் ஆண்டு பிறந்த தினத்தை நினைவு கூர 'கேக் வெட்டப்பட்டு' யாவருக்கும் பரிமாறப்பட்டது. இறுதியாக சிறந்த சுவைமிக்க ஐக்கிய மதியபோசணத்தில் யாவரும் பங்கு பற்றி இவ் விழா மனநிறைவுடன் முடிவடைந்தது.

திருமதி கிருபா பவசிங்கம்
உடுவிற் திருச்சபை
சபாசங்கப் பிரதிநிதி

## ஈழத் தமிழர் இறைமை

22,29.11.96 இன் தொடர்ச்சி

...தமிழர்களின் நிலப்பகுதியான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்கட்குரிய தேர்தல் தொகுதிகளில் கூட்டு முன்னணியின் வேட்பாளர்கள் போட்டியிட்டனராயினும் ஒருவராவது வெற்றி பெறவில்லை. தமிழ் வாக்காளர்கள் கூட்டு முன்னணியின் பொது வேலைத் திட்டத்தை முற்றாக எதிர்த்திருந்தார்கள்.

பல கட்சிகள் போட்டியிட்ட 1970 ம் பொதுத் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமையில் உள்ள மூன்று கட்சிகளின் கூட்டணி மட்டுமே, அரசியலமைப்பு யாக்க அவை ஒன்றை அமைப்பது மூலம், இலங்கையைத் தன்னாட்சியும், இறைமையும் உடைய குடியரசாக, மாற்றுவோம் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. வாசகர்களிடம் ஆற்றலுரி

4 ஆம் பக்கம் பார்க்க

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி

# உதயதாரகை

ஆதீன காரியாலயம் வட்டுக்கோட்டை

Estd 1841

மலர்: 158 10 - 1 - 1997 இதழ்: 2

## புத்தாண்டில் நிரந்தர சமாதானம்!

இன்று சர்வதேச ரீதியில் பல நாடுகளில் சமாதானத்திற்கு வெற்றிகள் கிடைத்து வருகின்றன. சில நாடுகளில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தங்களுக்கும் முடிவுகள் எடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. பிலிப்பைன்சிலும், கௌதமாலாவிலும், பங்களாதேஷ் இந்தியா போன்ற நாடுகளிலும் உள் நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றிருக்கின்றன,

இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதில், இவ்வாண்டு ஆரம்பத்தில் முனைப்பான செய்திகள் பரவலாகப் பேசப்பட்டன. நாட்டில் சமாதானம் நிலவிட வேண்டும் என்று எல்லா மக்களும் வேண்டுகோள் விடுத்துப் பிரார்த்தித்து வருகிறார்கள் யுத்தத்தால் மட்டும் நாடடில் சமாதானத்தை நிலைத்திடச் செய்யமுடியாது. பேச்சுவார்த்தைகள் மூலம் தான் நாட்டில் அமைதிகாண முடியும் என்று திடமாக அரசு நம்புவதாக பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அடிக்கடி வலியுறுத்தி வருவதைக் காண முடிகிறது.

அரசு முன்வைத்துள்ள அரசியல் பரவலாக்கல் திட்டத்தின் மூலம் மட்டும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியாது. சம்பந்தப்பட்ட தரப்பாருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலம் தான் வெற்றிகாண முடியும் என்று அரசுக்கு ஆதரவளிக்கும் தமிழ் கட்சிகள் கூறி வருகின்றன.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின், ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, அதற்குத் தீர்வுகாணாமல், அப்பிரச்சனைகளைத் தட்டிக் கழித்தமைதான், இன்று தமிழ்ப் பகுதிகளில், தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கையில் ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கான காரணம் என்ற கசப்பான உண்மையை சிங்கள மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். 1983 ஆம் ஆண்டில் நாட்டைக் கொச்சைப்படுத்திய வகுப்புவாதமும், அதற்கு உதவியாக இருந்த சில அரசியற் கட்சிகளும், இன்னும் தங்களது கொள்கைப் பாட்டை மாற்றிக் கொள்ளாது தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியற் பரவலாக்கல் தீர்வுத்திட்டம், நகரங்களில் தொடங்கி கிராமங்கள் வரை சென்றடைந்து கொண்டிருக்கின்றது. இவ் அரசியல் தீர்வு யோசனைகள் முடிவானவையல்ல என்பதால், அதுதான அரசின் உறுதியான தீர்வு என்று முடிவுக்கு வரமுடியாமல் இருக்கிறது. 1996 ஆம் ஆண்டு அரசின், யுத்த உபாயங்களைக் கவனிக்கும் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக யுத்த உபாயங்கள் பயன் தராது என்பது உணர்த்தி நிற்கின்றது. யுத்தம் மூலம் சமாதானத்தை நிலை நாட்டமுடியாது என்பதை 1996 ஆம் ஆண்டுப் போர் நடவடிக்கை உணர்த்திநிற்கிறது.

மலர்ந்துள்ள புத்தாண்டில் நாட்டின் நிரந்தர அமைதியும், சமாதானமும் சாந்தியும் நிலவ வேண்டுமாயின், அரசியற் பேச்சுக்களுக்கே முன்னுரிமை கொடுத்து, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக அரசியற் பேச்சுக்களை ஆரம்பித்து முன்னெடுக்கப்படல் வேண்டும்.

வாலிபர் பகுதி

## தேடலின் பாதையில். . .

வயோதிபர் ஒருவர், பாதையில் தவழ்ந்து எதையோ தேடிக் கொண்டிருந்தார். தொலைநதது நகையோ, நட்டோ தெரியவில்லை ஆனால் மிக உன்னிப்பாகத் தேடுகிறார் கிழவர் படும் அல்லலைக் கண்டு மனமிரங்குகின்றான் வழிப்போக்கன் ஒருவன்.

'அய்யா! என்ன தேடுகிறீர்?'

'என் சாவியைத் தொலைத்துவிட்டேன்'

இருவரும் சேர்ந்து தேடுகின்றனர். வழிப்போக்கன் நீண்ட நேரத்தின் பின் ஐயத்துடன் மீண்டும் வினவுகின்றான்.

'சாவியை எங்கே தொலைத்தீர்?'

'வீட்டில் தம்பி'—கிழவரின் பதில்

'அடக் கடவுளே! பின், எதற்கு இங்கே தேடுகிறீர்?'

'இங்கே தான் வெளிச்சம் அதிகம்'

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலையும் உலகம்.

வழமைபோலவே மார்கழி வந்தது கூடவே, நத்தாரும் வந்தது. கோயிற் பக்கமே தலைவைத்துப் படுக்காதவர்களும், கட்டாயம் கோயிலுக்கு வரும் நாளது.

நத்தார் இசைநிகழ்வும், பாலன் பிறப்பு நாடகமும் நத்தார் பப்பாக் கொண்டாட்டமும் தவறவில்லை. ஆறுதலுக்காய்ச் சிலர் ஆலயம் தேட அர்த்தமேயன்றி, பலர் ஆரவாரம் புரிகின்றனர்.

இங்கு வாழவேண்டிய வீடுகளில் கதவுகள் கூட இல்லை. வாழ்ந்தவர்கள் காடுகளில் கூடுகளைக் கட்ட, காட்டாற்றுவெள்ளம் போல் வந்தது மழைவெள்ளம் அடிமேலே அடி பட்டு, சுருண்டுபோய்க் கிடக்கிறது மனிதனும், மனிதநேயமும்.

கடவுளைத் தேடி புறப்பட்டவர்களுக்கு......
இதோ இயேசு கிறிஸ்து!
'பிறக்கும் போது இரவற் கொட்டில்!
தப்பியோடியதோ, வேறொரு நாட்டிற்கு
வாழ்ந்த போதோ, தலை சாய்க்க இடமில்லை
செத்ததோ, கயவன் போல் சிலுவையில்!
புதைக்கப்பட்டதோ, வேறொருவர் கல்லறையில்!
வெளிச்சத்தைப் பார்த்து, வேறு எங்கேயேனும் தேடாதீர்கள்!
மனிதவுருவில் வந்து மடிந்து போனதே — அதுதான் தெய்வம்.

—உங்கள் தோழமையில்
யூட் அண்ணா

## தவிக்கின்ற வாயுடன் தமிழகம்! 'தண்ணி' காட்டுகின்றது கர்நாடகம்!

பாரதத்தின் ''தேசிய நீரோட்டம்'' நடைமுறைப்படுத்தப்படும் ''இலட்சணத்துக்கு'' மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்களில் ஒன்று நதி நீர்ப்பங்கீட்டுத் தகராறாகும். மொழிவாரியாக இந்திய மாநிலங்களின் எல்லைகள் பிரிக்கப்பட்ட போது, வரண்ட மாநிலங்கள், வளமான மாநிலங்கள் என்கிற மிக மோசமான எல்லைப் பிரிப்புக்கள் அமைந்துவிட்டன. அதன் பலாபலன்களை வடக்கே ''ராஜஸ்தான்'' மாநிலமும், தெற்கே 'தமிழ் நாடு' மாநிலமும் மிக அதிகமாக அநுபவித்து வருகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டவிதிகளில் உள்ள கோளாறுகளும் சேர்ந்து, இத்தகைய 'பலவீனமான மாநிலங்களை' மேன்மேலும் புண்படுத்துகின்றன.

### திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்.........

'தமிழ் நாடு', இன்றைக்கு மட்டுமல்ல, அன்றைய எம் ஜி. ஆர். ஆட்சியிலிருந்தே, அயல் மாநிலங்களிடம் 'தண்ணீர்வரம்' கேட்டுத் 'தவமிருந்து' வருகின்றது. ஆனாலுங்கூட, 'கண்காணும் கடவுளாராகிய' அரசியல்வாதிகள் இன்று வரை அருள் புரியவே இல்லை. இலட்சக் கணக்கான விவசாயிகளின் வயிற்றுப் பாட்டுக்குவழி சொல்லும் ஒரே துணையான வரண்டவயல் நிலங்கள் பொருக்குலர்ந்து போய்ப் புழுதி கிளம்புகின்றது. அப்படியிருந்தும், இந்திய அரசியல் வாதிகளின் இரும்பு நெஞ்சங்கள் இளகுவாகத்தெரியவில்லை. 'தெலுங்கு—கங்கைத் திட்டம்', 'கிருஷ்ணா—சென்னைத் திட்டம்' என்கிற பெயர்ச் சூட்டுதல்களோடு எம். ஜி. ஆர். காலத்திலே தொடங்கப் பெற்ற நதிநீர்ப்பங்கீட்டுத் திட்டங்களெல்லாமே, தமிழக ஏழை விவசாயிகளின் காதுகளிலே பூச்சூட்டுதல்களாகவே முடிந்தன. இன்று இருபத்தியோராம் நூற்றாண்டை நெருங்கப்போகும் இந்த வேளையிலும் அதுவே தொடர் கதை.

### பேசிக் கிழித்த 'பெரியவர்கள்'

பயிர்ச் செய்கைக்குரிய நிலங்கள் பாளம் பாளமாக வெடித்துக் கிளம்பி விரிசல்விட; 'பேச்சுவார்த்தை' நாடகம் பெரிய அளவில் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது. முந்தைய ஜெயலலிதா ஆட்சியின்போது. அன்றைய கர்நாடக முதல்வர்களான பங்காரப்பா, வீரப்பமொய்லி ஆகியோருடன் இடம்பெற்ற 'நதிநீர்ப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தை' முடிவு காணாமல் நீண்டு, இறுதியில் 'தற்கொலை' புரிந்தது. பின்னர், அப்போதிருந்த நரசிம்மராவின் 'மௌனவிரத நடுவண் அரசு' ஒருவாறு ஈனக் குரல் எழுப்பி, 'நடுவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறார் சோலை



## அன்பான தம்பி தங்கைகளே!

நலமாக இருக்கிறீர்களா? ஆண்டவரின் அருள் உங்களுடன் கூட இருப்பதாக!

இனி தொடர்ந்து வரப்போகிற சிறார்சோலையில் 2 இராஜாக்கள் 4 ஆம் அதிகாரத்தில் நாம் காண்கின்ற குறிப்பிடத்தக்கவரில் ஒருவரான எலிசா பற்றி பார்ப்போம். ஒரு நாள் தீர்க்க தரிசிகளின் புத்திரரில் ஒருவனுக்கும் மனைவியாயிருந்து விடுதலையான ஒரு பெண் மிகுந்த கவலையுடன், தான் கர்த்தருக்கு விசுவாசமானவளெனவும், வறுவை மிஞ்சியதால் ஒருவனிடம் தான் கடன் வாங்கியதாகவும், கடன் பட்டு பலகாலம் ஆகியும் அக்கடனைத் திருப்பித் தர முடியாததால் தன் இரண்டு புதல்வர்களையும் கடன் கொடுத்தவன் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளப் போவதாகக் கூறுவதாகவும் முறையிட்டாள்.

''உன்னிடம் என்ன இருக்கிறது?'' என எலிசா கேட்ட கேள்விக்கு ''ஒரு குடம் எண்ணெய் மட்டும்'' என்று பதில் சொன்னாள் விதவை. எலிசா கர்த்தரின் கிருபையைக் கொண்டு அந்த எண்ணெயை பெருகும்படி செய்தார். அனேக பாத்திரங்கள் எடுத்து எண்ணெயை நிரப்பும்படி சொன்னார். அப்படியே எண்ணெய் நிரம்பியது. விதவை மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்தாள். இந்த சம்பவத்தில் இருந்து நாம் எதைக் கற்றுக் கொள்கிறோம்?

கர்த்தருக்கு உண்மையானவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் வாழ்பவர்கள் யாரும் வெட்கப்பட்டு போவதில்லை. சிந்திப்போமா? செயற்படுவோமா?? நீங்கள் சிந்தித்து செயற்பட கர்த்தர் ஆசீர்வதித்து வழிநடத்த தாரகை அண்ணா ஆசிக்கிறேன்.

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### சிறுவர் சிரிப்பு

ராமு:- ''எனது 'Beaf' ஐயும் 'Mutton' ஐயும் யாரோ களவாக அவிட்டுக் கொண்டு போய்விட்டார்கள......

சோமு:- ''புரியவில்லையே ...''

ராமு:- அடேய் புத்தியற்றவனே எனது மாட்டையும் ஆட்டையும் யரோ களவாக அவிட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

சோமு:- ?!??!!

### சென்றவாரப் புதிரின் விடை

```
  888
   88
    8
    8
    8
 ----
1,000
```

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### இவ்வாரப் புதிர்

இருவர் மாம்பழ வியாபாரிகள் இருவரும் ஒருவருக்கொருவர் முப்பது மாம்பழங்களை விற்கக் கொண்டு போகிறார்கள். ஒருவர் இரண்டு பழங்கள் ஒரு ரூபாவுக்கும், மற்றவர் மூன்று பழங்கள் ஒரு ரூபாவுக்கும் விற்பனை செய்கிறார்கள். இருவரது வருமானங்களையும் கூட்டினால் $10+15=25$ ரூபா கிடைக்கும் ஒரு நாள் ஒருவருக்கு சுகவீனம் மற்றவர் இவரது மாம்பழங்கள் உட்பட அறுபது மாம்பழங்கள் கொண்டு சென்று ஐந்து பழங்கள் இரண்டு ரூபா விற்றால் 24 ரூபா தான் கிடைக்கும். அது எவ்வாறு?

—புதிர்:— அன்ரனி சுதாகர்—

சரியான விடையை எழுதி அனுப்புங்களேன். விடை மறு இதழில்.

குறிப்பு:- நத்தார் சிறப்பு இதழில் வெளிவந்த புதிருக்கான விடையை எழுதி அனுப்பினவர்—

ச. ரொனி அநபாயன்
ஆண்டு 8A
புனித என்றியரசர் கல்லூரி
இளவாலை.

அன்பு தம்பிக்கு தாரகை அண்ணாவின் வாழ்த்துக்கள்!

மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம் கூறி விடைபெறுவது
என்றென்றும் அன்புடன்
**தாரகை அண்ணா**

## தவிக்கின்ற...

மன்றத் தீர்ப்பு' என்கிற ஓரளவு நியாயமான நிலைக்கு வழிகோலியது. இருந்தும், ஓரணுவும் பயன் இல்லை. நடுவர் மன்றத்தையே நிராகரித்தது கர்நாடகம். தட்டிக் கேட்டு, அதை அடக்குவதற்குத் தைரியமற்றிருந்தது ''நரஸிம்ம'' அரசு நடுவர் மன்றத்தை மட்டுமல்ல; நடுவர் மன்றத் தீர்ப்பையும் கூட ஏற்கவே முடியாது என்று கர்நாடகம் நீதி நியாயம் எதுவுமின்றித் துள்ளிக் குதித்தது. அப்போதுங்கூட, அந்த வாயில்லா நடுவண் அரசு 'வழிந்து' சொண்டுதானிருந்தது ஒரு மிகச் சிறுபான்மை அரசு காட்டவேண்டிய அத்தனை தன்னலன்களையும்; நாட்டின் பொது நலன்களுக்கெதிராக நரசிம்மராவ் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்,

### வாக்குமாறிகளின் நாக்கு நாடகம்

அனைத்துலக அரசியல் வாதிகளினதும் வாக்குறுதிசள் இரண்டு வகைப்படும்.

1. பதவிக்கு வரமுன்பான வாக்குறுதிகள்;

2. பதவிக்கு வந்த பின்பான வாக்குறுதிகள். இதைச் சுருக்கமாக 'ப, வ. மு.' 'ப. வ. பி.' எனக் குறிப்பிடலாம். இந்த அரசியல் வாதிகளுக்கே உரிய பொதுப்பண்பு 'வாக்கு மாறுதல்'. இத்தகைய அரசியற் பண்பிலக்கணங்களுக்குள் பெரிதும் முன்னணியில் இருப்பவர்கள் இந்திய அரசியல் வாதிகளே என்பதற்கு இன்றைய மத்திய—மாநில அரசுகளே சாட்சி! எம். ஜி. ஆர். ஆட்சிக்காலத்தில் ஆந்திர மாநில முதல்வராகவிருந்த என். டி. ராமராவ், கர்நாடக மாநில முதல்வராகவிருந்த குண்டுராவ் இருவருமே எம். ஜி. ஆரின் நெருங்கிய தோழர்கள்தான்; எனினும், ஏழைத்தமிழரின் தோழர்களாக இல்லாத காரணத்தால், கலித்த வயல்களுக்குத் தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டனர். இப்போதைய இந்தியப் பிரதமர் தேவகௌடா, மூன்பு கர்நாடக முதல்வராயிருந்த போது தமிழகத்திற்குத் தண்ணீர் தர மறுத்தவரே பொதுத்தேர்தலில் கொங்கிறஸ் கட்சியைத் தோற்கடிப்பதற்காகவும், நடுவண் அரசிலே பதவி பெறுவதற்காகவும், 'தமிழ் நாட்டுக்கு நியாயமான அளவு தண்ணீர் காவிரியிலிருந்து திறந்துவிடப்படும்' என்கிற அரசியல் முலாம் பூசப்பட்ட ஆசை வாக்குறுதியை அள்ளி வீசினார். கலைஞரும், அதனை 'நம்புவதுபோல் நம்பாமலும்; நம்பாததுபோல் நம்பியும்' நடித்தார்; நடிக்கிறார்; நடிப்பார். கொங்கிறஸைக் 'கூடையிலே' எறிந்துவிட்டு, வெற்றி பெற்றுக் கூட்டணிக்கூடாரம் அமைத்தார்கள் மத்தியில்! அதுவுங்கூட, பிளவுபட்ட கொங்கிறசுடனேதான்; மற்றையவை சிறு சிறு உதிரிக்கட்சிகள்.

### கலப்பட அரசியல் வியாபாரிகள்

ஆட்சிக் கட்டிலேறி, அரை ஆண்டாகியும், தமிழக வயல்களின் வரட்சியைப் போக்குவதற்கேற்ற அளவிலே முழுவருகை தரவில்லை காவிரி காரணம், தண்ணீரில் 'அரசியல்' கலந்தமையே. ஆக, 'அரசியல் வைரஸ்' எல்லாத்துறைகளிலும், எல்லாச் செயல்களிலும் தொற்றிக் கொண்டுவிட்டது. அதன் பின்விளைவுகள் மிகவிபரீதமானவை என்பதை உணர்ந்துங்கூட, வாக்குவேட்டைக்காகவும், சின்னஞ்சிறு அரசியல் இலாபங்களுக்காகவும் அக்'கிருமி'யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்று கர்நாடகத்தில் நடந்துகொண்டிருப்பதும் அதுதான் முன்னின்று நடத்துபவர். இப்போதைய கர்நாடக முதல்வர் ஜே. எச். பட்டேல். மத்தியிலே வீற்றிருந்து, மறைமுகமாகத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் தேவகௌடா ஒத்தூதி, உடுக்கடித்து. உருவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் கன்னடக் கலை, இலக்கிய, அரசியல் வாதிகள்.

### ஐயோ பாவம்!

'ஆட்சிக் கலைப்பு' என்கிற அபாயக்கனவுகண்டு அலறிக்கொண்டிருக்கும் கலைஞரின் தமிழக அரசு நடுவண் அரசை அதட்டிக் கேட்குந் திராணியற்று, பேச்சுவார்த்தை முக்காடிட்டபடி காலங்கடத்துகின்றது. 'கன்னடமும், களிதெலுங்கும் கவின் மலையாளமும், தன்னுதரத்தே எழுந்து, ஒன்று பலவாகிய பெருமைபடைத்த உயர்தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஏழை விவசாயிகள், 'தவித்துப்'போயிருக்கும் வயல்களுக்குத் தண்ணீர் கேட்கின்றார்கள். 'தண்ணி' காட்டிக் கொண்டே இருக்கின்றது கர்நாடகம்.

ஜெ. கி. ஜெ.

# உதயதாரகை

## ஈழத்தமிழர்...

மையைக் கோரியிருந்தது.

பாராளுமன்ற முறைகள் மூலம் இதனைச் செய்வதென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது தமிழர்களுக்குத் தனி மாநில ஆட்சி, சிங்களவர்களுக்குத் தனி மாநில ஆட்சி, இரண்டுப் இணைந்த மத்திய அரசு; இவற்றையுள்ளடக்கிய கூட்டாட்சி அரசியலமைப்பு அமைப்பதைத் தனது அடிப்படை நோக்கமாகக் கொண்டு தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி போட்டியிட்டது.

...ஏழாவது பாராளு மன்றத் தொடர்க் கூட்டத்தைத் தொடக்கி வைத்து ஆளுநர் முதல்வர் ஆற்றிய அரியணை உரையையும், அதற்கு நன்றி தெரிவித்துச் சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தையும் மேற்கோள்காட்டிப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் 157 பேருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதினார்கள். சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கூட்டம் கொழும்பு ரோயல் யூனியன் பாடசாலையின் அரங்கமான நவரங்கலாவில் 1970 யூன் 19 ம் நாள் நடைபெறும் வருகவெனக் கடிதத்தில் அழைத்திருந்தார்.

சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள், சபை மண்டபத்தில் கூடினால், அது சனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டமாகிவிடும். புதிய அரசியலமைப்பை யாக்கும சட்ட உரிமை சனப்பிரதிநிதிகள் சபைக்குக் கிடையாது. இருந்திருந்தாற்றான் எப்பொழுதோ செய்திருப்பார்களே!

சா. ஆ. தர்மரத்தினம்

இப்பத்திரிகை வடடுக்கோட்டை ஆதீன காரியாலயத்தில் உள்ள அமெரிக்க இலங்கை மிஷன அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர், G. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.